## பிரதமர் மோடிக்கு பிஜி நாட்டின் உயரிய விருது வழங்கி கவுரவிப்பு



**போர்ட் மோர்ஸ்பி:** இந்திய பிரதமர் மோடிக்கு, பிஜி நாட்டின் உயரிய விருதினை அந்நாட்டு பிரதமர் சிதிவேனி ரபுகா திங்கள்கிழமை வழங்கி கவுரவித்தார். பிரதமர் மோடியின் உலகளாவிய தலைமைத்துவத்தை அங்கீகரிக்கும் விதமாக பிஜி குடிமகனில்லாத ஒருவருக்கு இந்த கவுரவம் வழங்கப்பட்டிருக்கிறது.

இது குறித்து பிரதமர் அலுவலகம் அதன் அதிகாரபூர்வ ட்விட்டர் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "இது இந்தியாவுக்கான மிகப் பெரிய கவுரவம். பிரதமர் மோடியின் உலகளாவிய தலைமைத்துவத்தை அங்கீகரிக்கும் விதமாக, பிஜி நாட்டின் உயரிய விருதான 'கம்பானியன் ஆஃப் ஆர்டர் ஆஃப் பிஜி' என்ற விருதினை பிரதமர் மோடிக்கு வழங்கி பிஜி நாட்டுப் பிரதமர் கவுரவித்திருக்கிறார். இதுவரை பிஜி நாட்டு குடிமகன்களாக இல்லாத ஒரு சிலரே இந்த கவுரவத்தினை பெற்றுள்ளனர்" என்று தெரிவித்துள்ளது.

இந்த கவுரவத்தினை இந்திய குடிமக்கள் மற்றும் இருநாடுகளுக்கும் இடையிலான சிறப்பான உறவுகளுக்கு முக்கிய பங்காற்றிவரும் பிஜி - இந்திய சமூகங்களைச் சேர்ந்த தலைமுறையினருக்கும் பிரதமர் மோடி சமர்ப்பிப்பதாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் தனது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளது.

இந்திய - பசிபிக் தீவுகள் ஒத்துழைப்பு அமைப்பின் (எஃப்ஐபிஐசி) உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள சென்றுள்ள பிரதமர் மோடி, அதனிடையே பிஜி நாட்டுப் பிரதமர் சிதிவேனி ரபுகாவைச் சந்தித்தார். இதுகுறித்து தனது ட்விட்டர் பக்கத்தில், "பிஜி பிரதமரைச் சந்தித்ததில் பெரும்மகிழ்ச்சியடைகிறேன். பல்வேறு தலைப்புகளில் நாங்கள் உரையாடினோம். காலத்தின் சோதனையால் பிஜி மற்றும் இந்தியாவுக்கு இடையேயான உறவுகள் நின்றுவிட்டன. வரும் ஆண்டுகளில் அதனை முன்னெடுத்து செல்ல நாங்கள் ஒன்றிணைந்து செயல்பட உறுதியேற்றுள்ளோம்" என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக, ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் ஜி-7 அமைப்பின் உச்சி மாநாடு 19-ம் தேதி தொடங்கியது. இந்த மாநாட்டில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். இதனைத் தொடர்ந்து இந்திய - பசிபிக் தீவுகள் ஒத்துழைப்பு அமைப்பின் (எஃப்ஐபிஐசி) 3-வது உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரதமர் மோடி பப்புவா நியூ கினி நாட்டுக்கு சென்றுள்ளார். இன்று நடக்க இருக்கும் இந்த மாநாட்டை பிரதமர் மோடி தொகுத்து வழங்குகிறார். பப்புவா நியூ கினி நாட்டுக்கு பயணம் மேற்கொள்ளும் முதல் இந்தியப் பிரதமர் மோடி என்பது குறிப்பிடத்தக்கது.

## நிலவின் தென்துருவத்தை ஆராய்வதற்காக சந்திரயான்-3 விண்கலம் ஜூலை 12-ல் ஏவப்படுகிறது: இஸ்ரோ விஞ்ஞானிகள் தகவல்

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) நிலவை ஆய்வு செய்ய 2008-ல் சந்திராயன்-1 விண்கலத்தை அனுப்பியது. அது நிலவில் தண்ணீர் இருப்பதற்கான ஆதாரங்களை உறுதி செய்தது. இதையடுத்து, நிலவில் தரையிறங்கி ஆய்வு செய்யும் நோக்கில் சந்திராயன்-2 திட்டத்தை செயல்படுத்த இஸ்ரோ முடிவு செய்தது. இதற்காக நவீன வசதிகளுடன் சந்திரயான்-2 விண்கலம் உருவாக்கப்பட்டது.

இந்த விண்கலம் ஜிஎஸ்எல்வி மார்க்-3 ராக்கெட் மூலம் 2019 ஜூலை 22-ம் தேதி விண்ணில் ஏவப்பட்டது. 2019 செப்டம்பர் மாதம் நிலவின் சுற்றுப்பாதையை சென்றடைந்தது. எனினும், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக திட்டமிட்டபடி லேண்டர் கலன் தரையிறங்காமல் நிலவில் மோதிசெயலிழந்தது. அதேநேரம், விண்கலத்தின் மற்றொரு பகுதியானஆர்பிட்டர் நிலவின் சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது. இந்நிலையில் சந்திரயான்-3 திட்டத்தை சுமார் ரூ.615 கோடியில் செயல்படுத்த இஸ்ரோ முடிவு செய்தது.

இந்த விண்கலம் ஜூலை 12-ம் தேதி விண்ணில் ஏவப்பட உள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இதுகுறித்து இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறியதாவது: நிலவு பற்றிய ஆய்வுக்கு தென்துருவத்தில் தரையிறங்க வேண்டியது அவசியம். அதைக் கருத்தில் கொண்டு, மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் லேண்டர், ரோவர்கலன்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்தமுறை விண்கலத்தில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

சந்திரயான்-3 விண்கலம் ஜிஎஸ்எல்வி மார்க்-3 ராக்கெட் மூலம் வரும் ஜூலை 12-ம் தேதி விண்ணில் ஏவப்பட உள்ளது. சந்திரயான்-2போல

அல்லாமல் 42 நாட்கள் பயணத்துக்கு பின்னர் லேண்டர் கலன் ஆகஸ்ட் 22-ம் தேதி விண்ணில் தரையிறக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த திட்டம் வெற்றி பெற்றால் நிலவைபற்றிய பல்வேறு ரகசியகங்கள் வெளியுலகுக்கு தெரியவரும். இதற்கிடையே என்விஎஸ்-2 எனும்வழிகாட்டுதல் செயற்கைக்கோளும் ஜிஎஸ்எல்வி மார்க்-3 ராக்கெட் மூலம் மே 29-ம் தேதிவிண்ணில் ஏவப்பட உள்ளது. இதற்கான இறுதிகட்ட பணிகள் தற்போது நடைபெற்று வருகின் றன. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**அம்ரித் பாரத் நிலையம்' திட்டத்தின் கீழ் புதுப்பிக்கப்படும் உதகை, குன்னூர் ரயில் நிலையங்கள்**




**உதகை:** மத்திய அரசின் ‘அம்ரித் பாரத் நிலையம்’ திட்டத்தின் கீழ், பாரம்பரியம் மாறாமல் உதகை, குன்னூர்ரயில் நிலையங்கள் புதிப்பிக்கப்பட்டு வருகின்றன.

நாடு முழுவதும் அதிக வருவாய்,வரவேற்பு மற்றும் நகரங்களின் பாரம்பரிய சிறப்பின் அடிப்படையில், 1,275 ரயில் நிலையங்களில் புதிய நவீன வசதிகளை நீண்ட கால சிறப்பு திட்டத்தின் அடிப்படையில் மேம்படுத்துவதற்காக, அம்ரித் பாரத் நிலையம் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

அதன்படி, ரயில் நிலையத்தில் குறைந்தபட்சம் அடிப்படை தேவைகளை ஏற்படுத்துதல், எஸ்கலேட்டர் வசதி, மாற்றுத்திறனாளிகளுக்கு வசதி, ஒரு நிலையம் ஒரு பொருள் திட்டம், ரயில் நிலையத்தின் வடிவமைப்பு, இலவச வைபை வசதி, காத்திருப்போர் அறை, கழிப்பிட மேம்பாடு, சுகாதாரம், ஏற்கெனவே உள்ள வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் நீண்டகால தேவையின் அடிப்படையில் புதிய நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளன.

இந்த திட்டத்தின் கீழ் சேலம் ரயில்வே கோட்டத்தில் கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் உதகை, குன்னூர் உட்பட சுமார் 15 ரயில்நிலையங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதன்மூலமாக உதகை, குன்னூர் ரயில் நிலையங்களில் நவீன வசதிகள் மேம்படுத்தப்பட உள்ளன.

இதுகுறித்து ரயில்வே அதிகாரிகள் கூறும்போது, "மத்திய அரசின் அம்ரித் திட்டத்தின் கீழ், நீலகிரி மாவட்டத்தில் உதகை, குன்னூர் ஆகிய ரயில் நிலையங்களில் சுமார் ரூ.15 கோடி மதிப்பில் புனரமைப்பு பணி மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக டெண்டர் விடும் பணி நடைபெற்று வருகிறது.

2 கட்டங்களாக பணிகள் நடைபெற உள்ளன. முதல்கட்டமாக, டெண்டர் விடுதல் உட்பட்ட நிர்வாகப் பணிகள் இந்த ஆண்டு முடிக்கப்படும். அடுத்த ஆண்டு கட்டுமானப் பணி தொடங்கும்.

அதன்படி உதகை, குன்னூர் ரயில் நிலையங்களில் நுழைவுவாயில், வெளியேறும் வாயில் என தனி தனி பகுதிகள் கட்டப்படஉள்ளன. ரயில் நிலையம் உள்பகுதி மற்றும் வெளிப்பகுதிகளில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்படும்.

பயணிகள் காத்திருப்பு அறை மாற்றப்பட்டு, அங்கு தொலைக்காட்சி பொருத்தப்படும். உதகை மலை ரயில் யுனெஸ்கோ அமைப்பால் அங்கீகாரம் பெற்றுள்ளதால், மற்ற ரயில் நிலையங்களைபோல் இல்லாமல் உதகை, குன்னூர்

ரயில் நிலையங்களில் பாரம்பரியம் மாறாமல் பணிகள் நடைபெற உள்ளது கூடுதல் சிறப்பம்சமாகும்" என்றனர்.

**சர்வதேச அளவில் அரசியல் ரீதியாக நிலவும் உரம் விநியோக தடையை நீக்க வேண்டும்: ஜி-7 மாநாட்டில் வலியுறுத்திய பிரதமர் நரேந்திர மோடி**

**ஹிரோஷிமா:** ‘‘சர்வதேச அளவில் உரம் விநியோக சங்கிலியில் உள்ள அரசியல் ரீதியான தடைகளை நீக்க வேண்டும். செயற்கை உரங்களுக்கு மாற்றாக, உலக அளவில் இயற்கை விவசாயத்துக்கு அதிக ஆதரவு அளிக்க வேண்டும்’’ என்று ஜப்பானில் நடைபெற்ற ஜி-7 நாடுகளின் மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார். திருநங்கைகளின் உரிமைகளை பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் இணைந்து ஜி-7 அமைப்பை உருவாக்கியுள்ளன. இந்த நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் ஜி-7 மாநாடு ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் கடந்த 20-ம் தேதி தொடங்கியது. இந்த மாநாட்டில், சில நாடுகளின் தலைவர்கள் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்றனர். அவர்களில் பிரதமர் மோடியும் பங்கேற்று உரையாற்றினார்.

**இயற்கை விவசாயத்துக்கு ஆதரவு**

முன்னதாக, வியட்நாம் பிரதமர் பாம் மின் சின் - பிரதமர் மோடி சந்திப்பு நடைபெற்றது.அப்போது பாம் மின் சின்னிடம் பிரதமர் மோடி கூறும்போது, ‘‘சர்வதேச அளவில் உரம் விநியோகத்தில் உள்ள



EVA STALIN IAS ACADEMY

அரசியல் ரீதியான தடைகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். அது இந்த நேரத்தில் மிகவும் அவசியமானது.

மேலும், செயற்கை உரங்களுக்கு மாற்றாக, உலக அளவில் இயற்கை விவசாயத்துக்கு அதிக ஆதரவு அளிக்க வேண்டும். எனினும், உரம் விநியோக சங்கிலியை நாம் பலப்படுத்த வேண்டும். உரத்துக்கான ஆதாரங்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்ற சில நாடுகளின் போக்கை கட்டுப்படுத்த வேண்டும்’’ என்று வலியுறுத்தினார்.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளதால், உலக அளவில் உரம் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. அதை மறைமுகமாக குறிப்பிட்டு பிரதமர் மோடி பேசினார்.

பின்னர், மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது:

இந்தியாவில் திருநங்கைகளின் உரிமைகளை பாதுகாக்க சட்டம் கொண்டு வந்துள்ளோம். பல்வேறு துறைகளிலும், மற்றவர்களைப்போல அவர்கள் சரிசமமாக ஈடுபடும்நிலை அதிகரித்துள்ளது. தற்போது இந்தியாவின் வளர்ச்சி என்பது பெண்களின் நலத்திட்டங்களில் அமைந்துள்ளது.

இந்தியாவில் தற்போது பெண்களின் மேம்பாடு என்பது விவாதப் பொருளாக இல்லை. ஏனென்றால், பெண்கள் தலைமையிலான மேம்பாட்டில் இந்தியாதான் தலைமையாக விளங்குகிறது.

EVA STALIN IAS ACADEMY



**சிறுதானியங்களுக்கு ஊக்கம்**

அதேபோல, இந்தியாவில் சிறுதானியங்களை பிரபலப்படுத்தும் பணிகள் நடந்துவருகின்றன. ஊட்டச்சத்து குறைபாடு சவால்களை சமாளிக்க சிறுதானியங்கள் உதவுகின்றன. அத்துடன் பருவநிலை மாறுபாடு, தண்ணீர் சேமிப்பு, உணவு பாதுகாப்பு போன்ற பல வழிகளில் சிறுதானியங்கள் உதவி செய்கின்றன. அனைத்து பொருட்களும் அடங்கிய உணவு கொள்கைக்கு முன்னுரிமை அளிக்கிறோம். மிகவும் பின்தங்கிய, ஏழை விவசாயிகளின் நல்வாழ்வுக்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். இவ்வாறு பிரதமர் பேசினார்.

EVA STALIN IAS ACADEMY